2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தன் கால்வாய்த் திட்டம் நீண்ட நெடுங்காலமாக கோரிக்கையாகக் கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு திட்டம். நான் பொதுப் பணித் துறை அமைச்சராக 1989–ல் பணியாற்றியபோது தலைவர் அவர்கள் இத்திட்டம் குறித்து என்னிடத்திலே சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டு ரூ.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி போதவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்கு நிதி கேட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடாக ரூ.309 கோடி நிதி தேவை என்று* report *கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று நானும் நினைக்கிறேன். காரணம், மறைந்த அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் பலமுறை இம்மாமன்றத்தில் அதைப் பற்றி பேசியிருக்கிறார்கள். கடந்த வாரம்* Collectors' Conference *நடைபெற்றபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நந்தன் கால்வாய்த் திட்டப் பணி எந்தளவில் இருக்கிறது?' என்ற சிறு குறிப்பினை எழுதி என்னிடத்தில் காட்டினார்கள். நான் 'அதற்காக நிதியொதுக்கம் கேட்டிருக்கிறோம்' என்று தெரிவித்தேன். எனவே, அத்திட்டத்தை* implement *செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இவ்வாண்டு நிதியைத் தருவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

4. அறிவிப்புகள்

(அ) ஆஸ்திரேலியா நாடாளுமன்றக் குழுவினர் பேரவையில் உள்ள முக்கியப் பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து அவை நடவடிக்கைகளைப் பார்வையிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆஸ்திரேலியா நாடாளுமன்றத் தலைவர் மாண்புமிகு திரு. மில்டன் டிக் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தற்போது பேரவையிலுள்ள முக்கியப் பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது*

அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும், அவை உறுப்பினர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நான் அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

I am pleased to inform that Australian Parliamentary Delegation under the Chairmanship of Hon'ble Speaker Thiru. Milton Dick is now witnessing the proceedings of our Assembly from VIP galleries. On behalf of our Hon'ble Chief Minister Thiru M.K. Stalin, Members of Legislative Assembly and the people of Tamil Nadu, I extend a hearty welcome to them. (Thumping of desks)

3. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து மேல்புறக் கால்வாய் அமைத்து செங்கம், கலசப்பாக்கம், திருவண்ணாமலை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 23 ஏரிகளை நிரப்புகின்ற திட்டம், இந்தத் திட்டம். ஏற்கெனவே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சுமார் ரூ.269 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், அந்தத் திட்டம் நிலுவையில் உள்ளது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Dam Safety Review Panel *மூலம் சாத்தனூர் அணையைப் புனரமைப்பு செய்வதற்கும், அங்குள்ள* parks-*ஐ நல்லமுறையில் பராமரிப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.*